சுற்றறிக்கை இலக்கம் : 2016/13

எனது இலக்கம்:- ஈடீ/01/12/02/06/02–(I)
பாடசாலை செயற்பாடுகள் கிளை,
கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பத்தரமுல்லை,
2016.04.26.

மாகாண பிரதம செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கல்விக் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்.

## க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும்

க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும் எனும் தலைப்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2009.05.18 ஆந் திகதிய 2009/16 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2010.04.21ஆந் திகதிய 2009/16 (I) சுற்றறிக்கையின் திருத்தமும் இதற்கு ஏற்புடையதாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ள 2013.06.11ஆந் திகதிய சுற்றறிக்கைக் கடிதத்தினதும் சகல ஏற்புடைமைகளையும் விஞ்சியதாக 2016 இலும் அதன் பின்பும் 12 ஆம் தரத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு இச்சுற்று நிருப அறிவுறுத்தல்கள் அமுலில் இருக்கும்.

**2.0** க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியெய்தும் மாணவர்கள் க.பொ.த. (உயர் தர) வகுப்பில் தாம் பயில்வதற்கு எதிர்பார்க்கும் பாடத்துறையைத் தெரிவு செய்கையில், பாடங்கள் மற்றும் பாடச்சேர்மானங்கள் தொடர்பில் காணப்படும் சரியான தெளிவின்மை காரணமாக, சிக்கலான ஒரு நிலைமைக்கு முகம் கொடுக்கின்றார்கள். மேலும், பல்கலைக்கழகங்களில் தற்போது நடைமுறையில் உள்ள இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்குத் தேவையான பாடச்சேர்மானங்கள் குறித்து மாணவர்களிடையே காணப்படும் தெளிவின்மை காரணமாகவும் பல்கலைக்கழக அனுமதியின்போது பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். எனவே, இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவும் மாணவர்களுக்கான ஒரு வழிகாட்டியாகவும் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது. ஆகவே, இந்த சுற்றிக்கையில் குறிப்பிடப்படும் க.பொ.த. (உயர் தர) பாடச்சேர்மானங்களும் பல்கலைக்கழக இளமாணிப் பட்டக் கற்கைநெறிக்கான பாடச்சேர்மானங்களும் குறித்து 12ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் சகல மாணவர்களையும் அறிவுறுத்துவது அதிபர்களின் பொறுப்பாகும்.

**3.0** க.பொ.த (உயர் தர) வகுப்புக்களில் மூன்று பிரதான பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன், ஒரு பாடத்துக்கென ஒரு வாரத்தில் 10 பாடவேளைகள் ஒதுக்கப்படும். இதற்கமைய, குறிப்பிட்ட விதப்புரை செய்யப்பட்ட 03 பிரதான பாடங்களுக்கும் 30 பாடவேளைகள் ஒதுக்கப்படும். எஞ்சிய 10 பாடவேளைகளில் 06 பாடவேளைகள் பொது ஆங்கிலப் பாடத்துக்காக ஒதுக்கப்பட வேண்டியதுடன், பொது தகவல் தொழில்நுட்பம் (GIT) பாடத்துக்காக 12ஆம் தரத்தில் மாத்திரம் 02 பாடவேளைகளை ஒதுக்குதல் வேண்டும். 12ஆம் தரத்தில் எஞ்சிய 02 பாடவேளைகளையும் 13ஆம் தரத்தில் எஞ்சிய 04 பாடவேளைகளையும் பாடசாலை முகாமைத்துவக் குழுவின் விருப்பத்தின் பிரகாரம் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

**4.0** விதிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் 13ஆம் தரத்தின் இறுதியில் பிரதான 03 பாடங்களுடன் பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கில பாடப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பொது ஆங்கில பாடத்தில் பெறப்படும் புள்ளியோ அல்லது சித்தியோ பல்கலைக்கழக அனுமதியின்போது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் குறித்த பாடத்தில் பெறப்படும் பெறுபேறு க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழில் குறிப்பிடப்படும்.

## 5.0 க.பொ.த.(உயர் தர) பாடத்துறைகளுக்கான பாடச்சேர்மானங்கள்

பாடசாலைகளில் தற்போது க.பொ.த. (உயர் தர) வகுப்புகளுக்காக மூன்று பிரிவுகளின் கீழ் (கலை/ வணிகவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல்) ஆறு (6) பாடத்துறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### 5.1 கலைப் பாடத்துறை

மாணவர்கள் கலைப் பாடத்துறையின் கீழ் கல்வி பயில்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இசைவாகப் பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**5.1.1** கீழே காட்டப்பட்டுள்ள சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைகள் பாடத் தொகுதியிலிருந்து (5.1.6 அ) குறைந்தது ஒரு பாடத்தையேனும் தெரிவு செய்தல் வேண்டும். (மொழிப் பாடங்கள் 02இனை அல்லது மொழிப் பாடங்கள் மூன்றினையும் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு இது ஏற்புடையதாகாது) மாணவரது விருப்பத்தின் பிரகாரம், இத் தொகுதியிலிருந்து இரண்டு பாடங்களையோ அல்லது மூன்று பாடங்களையுமோ தெரிவு செய்ய முடியும்.

**5.1.2** கீழே காட்டப்பட்டுள்ள சமயங்களுக்கும் நாகரீகங்களுக்குமான பாடங்களிலிருந்து (5.1.6 ஆ) யாதேனும் சமயமொன்றைத் தெரிவு செய்வதாயின், அதனுடன் தொடர்புடைய நாகரீக பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

**5.1.3** கீழே காட்டப்பட்டுள்ள அழகியற் கல்விப் பாடங்களிலிருந்து (5.1.6 இ) ஒரு பாடத்தை அல்லது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்ய முடியும்.

**5.1.4** கீழே காட்டப்பட்டுள்ள மொழிகள் பாடத் தொகுதியிலிருந்து (5.1.6 ஈ) எந்தவொரு மொழிப் பாடத்தையும் அல்லது பாடங்கள் இரண்டினையும் தெரிவு செய்ய முடியும். ஆனால், மூன்று பாடங்களையும் மொழிப் பாடங்களிலிருந்து தெரிவு செய்வதாயின், அது பின்வரும் விதத்தில் மாத்திரம் அமைதல் வேண்டும்.

- 5.1.6 (ஈ) (1) இல் குறிப்பிடப்படும் 03 பாடங்களும்
- 5.1.6 (ஈ) இல் (1) மற்றும் (2) ஆகிய இரண்டு உபதொகுதிகளிலிருந்தும் மாத்திரம் தெரிவுசெய்யப்படும் மூன்று பாடங்கள்

**5.1.5** மொழிப் பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்யும் ஒரு மாணவன் தனது மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைகள், சமயங்கள் மற்றும் நாகரீகம், அழகியற் கல்வி ஆகிய பாடத் தொகுதிகளிலிருந்து தாம் விரும்பிய ஒரு பாடத்தைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

### 5.1.6 கலைப் பாடத்துறைக்கான பாடத்தொகுதிகள்

#### (அ) சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூக கற்கைப் பாடங்கள்

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது நவீன உலக வரலாறு)
4. மனைப் பொருளியல்
5. அரசியல் விஞ்ஞானம்
6. அளவையியலும் விஞ்ஞான முறையும்
7. கணக்கீடு அல்லது வணிகப் புள்ளிவிபரவியல்
8. விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம் அல்லது இணைந்த கணிதம்
9. தொழிட்பவியல் பாடங்களிலிருந்து ஒரு பாடம் (குடிசார் தொழில் நுட்பவியல் அல்லது பொறிமுறைத் தொழில்நுட்பவியல் அல்லது மின், இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அல்லது உணவுத் தொழில்நுட்பவியல் அல்லது விவசாயத் தொழில்நுட்பவியல் அல்லது உயிர் வளத் தொழில்நுட்பவியல்)
10. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
11. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

#### (ஆ) சமயங்களும் நாகரீகங்களுக்குமான பாடங்கள்

1. பௌத்த சமயம் அல்லது பௌத்த நாகரீகம்
2. கிறிஸ்தவ சமயம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம்
3. இந்து சமயம் அல்லது இந்து நாகரீகம்
4. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம்
5. கிரேக்க மற்றும் உரோம நாகரீகம்

#### (இ) அழகியற் கல்விப் பாடங்கள்

1. சித்திரம்
2. நடனம் (தேசிய அல்லது பரதம்)
3. சங்கீதம் (கீழைத்தேய அல்லது கர்நாடக அல்லது மேலைத்தேய)
4. நாடகமும் அரங்கியலும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)

#### (ஈ) மொழிப் பாடங்கள்

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம்
2. அரபு, பாளி, சமஸ்கிருதம்
3. சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ரஷியன், ஹிந்தி, ஜப்பான்

## 5.2 வணிகவியல் பாடத்துறை

இப்பாடத்துறையில் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களுள் குறைந்தது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. கணக்கீடு
2. வணிகக் கல்வி
3. பொருளியல்

**எஞ்சிய பாடத்தை கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.**

1. வணிகப் புள்ளிவிபரவியல்
2. புவியியல்
3. அரசியல் விஞ்ஞானம்
4. வரலாறு (இலங்கையின் வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது நவீன உலக வரலாறு)
5. அளவையியலும் விஞ்ஞான முறையும்
6. ஆங்கிலம்
7. ஜேர்மன்
8. பிரெஞ்சு
9. விவசாய விஞ்ஞானம்
10. இணைந்த கணிதம் அல்லது கணிதம்
11. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

## 5.3 உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறை

இந்தப் பாடத்துறையினைக் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் உயிரியல் பாடத்துடன் கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து இரண்டு பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. இரசாயனவியல்
2. பௌதீகவியல்
3. விவசாய விஞ்ஞானம்
4. கணிதம்

## 5.4 பௌதீக விஞ்ஞான பாடத்துறை

இந்தப் பாடத்துறையில் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து மூன்று பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்

1. இணைந்த கணிதம்
2. இரசாயனவியல்
3. பௌதிகவியல்
4. உயர் கணிதம்

## 5.5 உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பாடத்துறை

இந்தப் பாடத்துறையில் கற்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களைக் கட்டாயமாகத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
2. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

மூன்றாவது பாடத்தை பின்வரும் பாடங்களிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

1. பொருளியல்
2. புவியியல்
3. மனைப் பொருளியல்
4. ஆங்கிலம்
5. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
6. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
7. சித்திரம்
8. வணிகக் கல்வி
9. விவசாய விஞ்ஞானம்
10. கணக்கீடு
11. கணிதம்

### 5.6 பொறியியல் தொழில்நுட்ப பாடத்துறை

இந்தப் பாடத்துறையில் கற்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களைத் தெரிவு செய்வது கட்டாயமானதாகும்.

1. பொறியியற் தொழில்நுட்பவியல்
2. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

மூன்றாவது பாடத்தை பின்வரும் பாடங்களிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

1. பொருளியல்
2. புவியியல்
3. மனைப் பொருளியல்
4. ஆங்கிலம்
5. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
6. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
7. சித்திரம்
8. வணிகக் கல்வி
9. விவசாய விஞ்ஞானம்
10. கணக்கீடு
11. கணிதம்

**6.0** மேற்குறிப்பிடப்படும் விதத்தில் பாடத்துறைகளின் கீழ் குறிப்பிட்ட பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். ஆனால் குறிப்பிட்ட பாடசாலையில் போதிய எண்ணிக்கையிலான மாணவர்கள் காணப்படும் பட்சத்திலும் நேர சூசியை வழங்குவதற்கும் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் இயலுமான பாடங்களுக்கு மாத்திரம் தமக்கு விருப்பமான பாடங்களைக் கொண்ட பாடச்சேர்மானத்தைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்க முடியும். ஆயினும், பாடங்களுக்கு இடையில் "அல்லது" எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் அதிலிருந்து ஒரு பாடத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும். இவ்வாறு பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியின்போது தெரிவு செய்ய வேண்டிய பாடநெறிகள் குறித்துப் பரந்த அறிவினைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

**7.0** ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் "குறித்த பாடத்துறை ஒன்றில் அடங்காத" என அறிமுகப் படுத்தப்படுவதுடன், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் "நாடளாவிய தரம்" (Island Rank) மற்றும் "மாவட்டத் தரம்" (District Rank) வெளியிடப்பட மாட்டாது.

**8.0** க.பொ.த. (உயர் தர) த்திற்கான சகல பாடங்களும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் கற்பிக்கப்படுவதுடன், கீழே காட்டப்பட்டுள்ள பாடங்களை ஆங்கில மொழியிலும் கற்பிக்க முடியும்.

1. உயிரியல்
2. பௌதீகவியல்
3. இரசாயனவியல்
4. இணைந்த கணிதம்
5. விவசாய விஞ்ஞானம்
6. கணக்கீடு
7. வணிகக் கல்வி
8. பொருளியல்
9. அரசியல் விஞ்ஞானம்
10. புவியியல்

இதற்கு மேலதிகமாக ஆங்கில மொழியில் வேறு பாடங்களைக் கற்பிப்பதற்கு தேவையாயின், மற்றும் இதற்கான வளங்கள் காணப்படுமாயின், கல்வி அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கற்பிக்க முடியும்.

## 9.0 பல்கலைக்கழகப் பட்டப் பாடநெறிகளுக்கான பாடச்சேர்மானங்கள்

**9.1** பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படும் இளமாணிப் பட்டப் பாடநெறிகளுக்கு அனுமதிப்பதற்காக மாணவர்கள் க.பொ.த. (உயர் தரம்) இல் பயில வேண்டிய பாடச்சேர்மானங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழக இளமாணிப் பட்டப் பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுவதற்கான அடிப்படைத் தகைமையாக க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சையில் குறிப்பிட்ட பிரதான மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்பதுடன், பொதுப் பரீட்சையில் தேவையான புள்ளி மட்டத்தைப் பெற்றிருத்தலும் கட்டாயமானதாகும். ஆனாலும், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் அடிப்படை மற்றும் தெரிவுசெய்யப்படக் கூடிய எண்ணிக்கைக்கு ஏற்ப, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யும் நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும்.

**9.2** பல்கலைக்கழக இளமாணிப் பட்டப் பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதப்புரை செய்யப்பட்டுள்ள க.பொ.த. (உயர் தர) பாடச்சேர்மானங்கள் மாத்திரம் கீழே காட்டப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின், குறிப்பிட்ட கல்வியாண்டுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் “இலங்கைப் பல்கலைக்கழக இளமாணிப் பட்டப் பாடநெறிகளுக்கான அனுமதி” எனும் கையேட்டினைப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

### (1) கலை (ARTS)

கலைப் பாடத்துறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்ட 03 பாடங்கள்

### (2) கலை (ஸ்ரீபாளி வளாகம்) (ARTS – SRIPALI CAMPUS)

கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகக் கலைப் பாடத்துறையின் கீழ் தரப்பட்டுள்ள 03 பாடங்கள்

- மொழிப்பாடங்கள் இரண்டிற்கு அதிகமாகத் தோற்றாதிருத்தல் வேண்டும்
- சமயங்களும் நாகரீகங்களும் தொகுதியிலிருந்து ஒரு பாடத்திற்கு அதிகமாகத் தோற்றாதிருத்தல் வேண்டும்
- ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்நுட்பவியல் பாடங்களுக்குத் தோற்றாதிருத்தல் வேண்டும்
- பின்வரும் பாடங்களில் ஒன்றுக்கு அதிகமாகத் தோற்றாதிருத்தல் வேண்டும்
  - கணக்கியல்
  - வணிகப் புள்ளிவிபரவியல்
  - பொருளியல்

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது சாதாரண சித்தி (S) பெற வேண்டுமென்பதுடன், தகுதிகாண் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

### (3) கலை (சப்ரகமுவ) - (ARTS - SABARAGAMUWA)

கலை, வணிகம் ஆகிய ஏதேனும் பாடத்துறைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 03 பாடங்கள்

**(4) தொடர்பாடல் கற்கைகள் (COMMUNICATION STUDIES)**

சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது திறமைச் சித்தி (C) உடன் ஏதேனும் 03 பாடங்கள்
க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியைக் (C) கொண்டிருத்தல் வேண்டும்

**(5) சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் (PEACE & CONFLICT RESOLUTION)**

யாதேனும் மூன்று பாடங்கள்

**(6) இஸ்லாமிய கற்கைகள் (ISLAMIC STUDIES)**

இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீக பாடத்துடன் வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள்

**(7) அரபு மொழி (ARABIC LANGUAGE)**

அரபு மொழியுடன் வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள்

**(8) சங்கீதம்/ நடனம்/ சித்திரம் மற்றும் வடிவமைப்பு/ நாடகமும் அரங்கியலும்/ கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும்/ கட்புலக் கலை (MUSIC/ DANCING/ ART & DESIGN/ DRAMA & THEATRE/ VISUAL & TECHNOLOGICAL ARTS/ VISUAL ARTS)**

கற்பதற்கு எதிர்பார்க்கும் பாடநெறி தொடர்பிலான பாடத்துக்கு (சங்கீதம்/ நடனம்/ சித்திரம்/ நாடகமும் அரங்கியலும்) குறைந்தது திறமைச் சித்தியுடன் (C) ஏனைய யாதேனும் இரண்டு பாடங்கள்.
இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சையிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

**(9) முகாமைத்துவம்/முகாமைத்துவம் (பொது) சிறப்பு/சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்/ வணிகவியல் (MANAGEMENT / MANAGEMENT (PUBLIC) SPECIAL/ ESTATE MANAGEMENT & VALUATION / COMMERCE)**

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்காக பின்வரும் பாடச்சேர்மானங்களில் ஒரு பாடச்சேர்மானம்

**(i)** வணிகக் கல்வி, பொருளியல் மற்றும் கணக்கீடு அல்லது
**(ii)** மேலே (i) இல் குறிப்பிடப்படும் பாடங்களில் இரண்டு பாடங்களும் பின்வரும் பாடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடமும்

| | |
|---|---|
| விவசாய விஞ்ஞானம் | புவியியல் |
| ஆங்கிலம் | இணைந்த கணிதம் அல்லது கணிதம் |
| பௌதிகவியல் | வரலாறு |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | வணிகப் புள்ளிவிபரவியல் |
| ஜேர்மன் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| அரசியல் விஞ்ஞானம் | பிரெஞ்சு |

**(10) முகாமைத்துவக் கற்கைகள் (திருகோணமலை மற்றும் வவுனியா) - MANAGEMENT STUDIES (TRINCOMALEE & VAVUNIA)**

எந்தவொரு பாடத்துறையின் கீழும் ஏதேனும் 03 பாடங்கள்

**(11) வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) BUSINESS INFORMATION SYSTEMS) (SPECIAL)**

கணக்கியல் வணிகக் கல்வி பொருளியல்

மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களில் குறைந்தது 02 பாடங்களுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
அளவையியலும் விஞ்ஞான முறையும்
இணைந்த கணிதம் அல்லது கணிதம்
வணிகப் புள்ளிவிபரவியல்
பௌதிகவியல்

**(12) மருத்துவம்/ பல் அறுவைச் சிகிச்சை/ விலங்கு மருத்துவ விஞ்ஞானம் (MEDICINE/ DENTAL SURGERY/ VETERINARY SCIENCE)**

பின்வரும் மூன்று பாடங்களும்

உயிரியல் இரசாயனவியல் பௌதிகவியல்

**(13) விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT)**

பின்வரும் பாடச்சேர்மானங்களில் ஒரு பாடச் சேர்மானம்

(i) இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல்

(ii) இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது கணிதம், உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம்

(iii) இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம்

**(14) விவசாயம் (AGRICULTURE)**

மேற்குறிப்பிடப்பட்ட விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் பாடநெறிக்கான பாடச்சேர்மானங்கள் (இலக்கம் 13ஐப் பார்க்கவும்)

**(15) உணவு விஞ்ஞானமும் போசாக்கும் (FOOD SCIENCE & NUTRITION)**

மேற்குறிப்பிடப்பட்ட விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் பாடநெறிக்கான பாடச்சேர்மானம் (இலக்கம் 13ஐப் பார்க்கவும்)

**(16) உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (FOOD SCIENCE & TECHNOLOGY)**

இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்.

**(17) ஆயுர்வேதம்/ யுனானி/ சித்த மருத்துவம் (AYURVEDA/ UNANI/ SIDDHA)**

உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய மூன்று பாடங்களும்

**(18) உயிரியல் விஞ்ஞானம் (BIOLOGICAL SCIENCE)**

உயிரியல், இரசாயனவியல் மற்றும் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

| | |
|---|---|
| விவசாய விஞ்ஞானம் | கணிதம் அல்லது இணைந்த கணிதம் |
| உயர் கணிதம் | பௌதிகவியல் |

**(19) பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்)**
**(APPLIED SCIENCE – BIOLOGICAL SCIENCE)**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உயிரியல் விஞ்ஞான பாடநெறிக்காகத் தரப்பட்டுள்ள சேர்மானம் (இலக்கம் 18ஐப் பார்க்கவும்)

**(20) சுகாதார விருத்தி (HEALTH PROMOTION)**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உயிரியல் விஞ்ஞான பாடநெறிக்காகத் தரப்பட்டுள்ள பாடச் சேர்மானம் (இலக்கம் 18ஐப் பார்க்கவும்)

**(21) தாதியியல் (NURSING)**

உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய மூன்று பாடங்களும்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்தது சாதாரண சித்தியைப் (S) பெற்றிருத்தல்

**(22) மருந்தகவியல் (PHARMACY)**

இரசாயனவியலில் குறைந்தது திறமைச் சித்தியுடன் (C) பௌதிகவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில், குறைந்தது சாதாரண சித்தியைப் (S) பெற்றிருத்தல்

**(23) மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்**
**(MEDICAL LABORATORY SCIENCES)**

பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில், குறைந்தது சாதாரண சித்தியைப் (S) பெற்றிருத்தல்

**(24) ஊடுகதிர்ப்படவியல் (RADIOGRAPHY)**

பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில், குறைந்தது சாதாரண சித்தியைப் (S) பெற்றிருத்தல்

**(25) இயன் மருத்துவம் (PHYSIOTHERAPY)**

பௌதிகவியல் மற்றும் இரசாயனவியலுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

உயிரியல் இணைந்த கணிதம் உயர் கணிதம் கணிதம்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில், குறைந்தது சாதாரண சித்தியைப் (S) பெற்றிருத்தல்.

**(26) மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும்**
**(MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY)**

பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்

**(27) மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானங்களும்**
**(FISHERIES & MARINE SCIENCES)**

மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் பாடநெறிக்கான பாடச்சேர்மானம் (இலக்கம் 26ஐப் பார்க்கவும்)

**(28) சூழல் பேணலும் முகாமைத்துவமும்**
**(ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT)**

உயிரியல் மற்றும் இரசாயனவியலுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

பௌதிகவியல் இணைந்த கணிதம்
விவசாய விஞ்ஞானம் கணிதம்

**(29) விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் (ANIMAL SCIENCE & FISHERIES)**

பின்வரும் பாடச்சேர்மானங்களில் ஒரு பாடச்சேர்மானம்

(i) இரசாயனவியல், உயிரியல் மற்றும் பௌதிகவியல்
(ii) இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாய விஞ்ஞானம்

**(30) உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும்**
**(FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT)**

விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் பாடநெறிக்கான பாடச்சேர்மானம் (இலக்கம் 13ஐப் பார்க்கவும்)

**(31) பொறியியல் (ENGINEERING)**

பின்வரும் மூன்று பாடங்களும்-

இரசாயனவியல் இணைந்த கணிதம் பௌதிகவியல்

**(32) பொறியியல் (EM) - நில வளங்கள் பொறியியல்**
**(ENGINEERING) (EM) - (EARTH RESOURCES ENGINEERING)**

பொறியியல் பாடநெறிக்கான பாடச்சேர்க்கை (இலக்கம் 31ஐப் பார்க்கவும்)

**(33) பொறியியல் (TM) - புடைவை மற்றும் துணி தொழில்நுட்பம் (ENGINEERING) (TM) - (TEXTILE & CLOTHING TECHNOLOGY)**

பொறியியல் பாடநெறிக்கான பாடச்சேர்மானம் (இலக்கம் 31ஐப் பார்க்கவும்)

**(34) பௌதிக விஞ்ஞானம் (PHYSICAL SCIENCE)**

இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் மற்றும் இரசாயனவியல் அல்லது பௌதிகவியலை உள்ளடக்கியதாக பின்வரும் பாடங்களில் மூன்று பாடங்கள்

| | | |
|---|---|---|
| விவசாய விஞ்ஞானம் | இணைந்த கணிதம் | உயிரியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் | பௌதிகவியல் |

**(35) கணினி விஞ்ஞானம் (COMPUTER SCIENCE)**

இணைந்த கணிதம் அல்லது பௌதிகவியல் அல்லது உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றுக்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் (C) பின்வரும் பாடங்களில் மூன்று பாடங்கள்

| | | |
|---|---|---|
| இணைந்த கணிதம் அல்லது கணிதம் | உயர் கணிதம் | இரசாயனவியல் |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | பௌதிகவியல் | |

**(36) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (INFORMATION & COMMUNICATION TECHNOLOGY)**

பின்வரும் பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) ஏதேனும் மூன்று பாடங்கள்

| | |
|---|---|
| உயர் கணிதம் | உயிரியல் |
| கணிதம் அல்லது இணைந்த கணிதம் | பௌதிகவியல் |
| கணக்கீடு | இரசாயனவியல் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| வணிகக் கல்வி | குடிசார் தொழில்நுட்பவியல் |
| புவியியல் | பொறிமுறை தொழில்நுட்பவியல் |
| பொருளியல் | |
| இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் | |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | |
| சங்கீதம் (கீழைத்தேய/ கர்நாடக/ மேலைத்தேய) | |
| சமஸ்கிருதம் | |

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கு ஆகக் குறைந்தது திறமைச் சித்தியைக் (C) கொண்டிருத்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

## (37) பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) (APPLIED SCIENCES/ PHYSICAL SCIENCE)

இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் மற்றும் இரசாயனவியல் அல்லது பௌதிகவியல் பாடங்களுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

விவசாய விஞ்ஞானம்
உயர் கணிதம்
உயிரியில்
இரசாயனவியல்
இணைந்த கணிதம்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
பௌதிகவியல்

## (38) போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும் (TRANSPORT & LOGISTICS MANAGEMENT)

பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய மூன்று பாடங்களும்

## (39) கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் (INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE)

இணைந்த கணிதத்துடன் பின்வரும் பாடங்களில் இரண்டு பாடங்கள்

உயர் கணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்

## 40) புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் (STATISTICS & OPERATIONS RESEARCH)

இணைந்த கணிதத்துடன் பின்வரும் பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்கள்

உயிரியல்
உயர் கணிதம்
விவசாய விஞ்ஞானம்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
பௌதிகவியல்
இரசாயனவியல்
கணிதம்

## (41) கணக்கிடலும் தகவல் முறைமைகளும் (COMPUTING & INFORMATION SYSTEMS)

இணைந்த கணிதம், பௌதிகவியல், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றில் குறைந்தது திறமைச் சித்தியும் (C) பின்வரும் பாடங்களுள் இரண்டு பாடங்களும்

இணைந்த கணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல்

## (42) தகவல் தொழில்நுட்பம் (INFORMATION TECHNOLOGY- IT)

பின்வரும் பாடங்களில் குறைந்தது ஒரு பாடத்துக்கு திறமைச் சித்தியும் (C) வேறு ஏதேனும் இரண்டு பாடங்களும்

உயர் கணிதம்    கணிதம்    இணைந்த கணிதம்    பௌதிகவியல்

## (43) முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MANAGEMENT & INFORMATION TECHNOLOGY – MIT)

உயர் கணிதம், இணைந்த கணிதம், கணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்துக்கான திறமைச் சித்தியுடன் (C)

(i) உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறையிலிருந்து அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையிலிருந்து மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அல்லது

(ii) உயிரியல் பாடத்துறையிலிருந்து அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையிலிருந்து இரண்டு பாடங்களிலும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் பாடத்திலும் சித்தியடைந்திருத்தல்.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## (44) கணிய அளவையியல் (QUANTITY SURVEYING)

இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடத்திலும் பின்வரும் பாடங்களில் ஒரு பாடத்தில் அல்லது இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கணக்கீடு | பொருளியல் | பௌதிகவியல் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | வணிகக் கல்வி | இரசாயனவியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |

இதற்கு மேலதிகமாக க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கில மற்றும் கணித பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் விஞ்ஞான பாடத்தில் குறைந்தது சாதாரண சித்தியையும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

## (45) அளவையியல் விஞ்ஞானம் (SURVEYING SCIENCE)

பௌதிகவியல், இணைந்த கணிதம் உடன் வேறு ஏதேனும் ஒரு பாடம்

**(46) பட்டினமும் நாடும் திட்டமிடல் (TOWN & COUNTRY PLANNING)**

(i) பின்வரும் பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்கள்

| | |
|---|---|
| கணக்கீடு | இரசாயனவியல் |
| உயர் கணிதம் | விவசாய விஞ்ஞானம் |
| இணைந்த கணிதம் | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| உயிரியல் | பொருளியல் |
| அரசியல் விஞ்ஞானம் | வணிகக் கல்வி |
| கணிதம் | பௌதிகவியல் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | புவியியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | |

(ii) மூன்றாவது பாடம் பின்வரும் பாடங்களுள் ஒன்றாக அமைதல் வேண்டும்.

| | |
|---|---|
| அரபு | கிறிஸ்தவ நாகரீகம் |
| மலாய் | பௌத்த சமயம் |
| மனைப் பொருளியல் | பாளி |
| பௌத்த நாகரீகம் | ஹிந்தி |
| ரஷ்யன் | கிறிஸ்தவ சமயம் |
| இந்து சமயம் | சமஸ்கிருதம் |
| சீனம் | இந்து நாகரீகம் |
| சிங்களம் | ஆங்கிலம் |
| வரலாறு | தமிழ் |
| பிரெஞ்சு | இஸ்லாம் |
| கிரேக்க மற்றும் உரோம நாகரீகம் | ஜேர்மன் |
| இஸ்லாமிய நாகரீகம் | ஜப்பான் |
| சித்திரம் | |

இதற்கு மேலதிகமாக, க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பாடநெறிக்குத் தகைமை பெறும் பொருட்டு விண்ணப்பதாரிகள் 2017/2018 கல்வியாண்டு முதல் மேலே (i) தொகுதியின் கீழ் உள்ள பாடங்களிலிருந்து மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் 2017/2018 கல்வியாண்டு முதல் க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தது (B) சித்தியையும் கணித பாடத்தில் திறமைச் சித்தியையும் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

**(47) கட்டடக் கலை (ARCHITECTURE)**

(i) பின்வரும் பாடங்களிலிருந்து குறைந்தது ஒரு பாடம்

| | | |
|---|---|---|
| சித்திரம் | புவியியல் | உயிரியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | | |

மற்றும்

(ii) பின்வரும் பாடங்களில் மேலும் ஒரு பாடம் அல்லது இரண்டு பாடங்கள்

| | | |
|---|---|---|
| கணக்கீடு | ஹிந்தி | அரபு |
| இந்து நாகரீகம் | பௌத்த நாகரீகம் | வரலாறு |
| வணிகப் புள்ளிவிபரவியல் | மனைப் பொருளியல் | வணிகக்கல்வி |
| இஸ்லாமிய நாகரீகம் | சீனம் | ஜப்பான் |
| கிறிஸ்தவ நாகரீகம் | | |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | | பொருளியல் |
| அரசியல் விஞ்ஞானம் | கணிதம் | பாளி |
| ஆங்கிலம் | சமஸ்கிருதம் | பிரெஞ்சு |
| சிங்களம் | தகவல், தொடர்பாடல் | தொழில்நுட்பம் |
| ஜேர்மன் | கிரேக்க மற்றும் உரோம நாகரீகம் | |
| விவசாய விஞ்ஞானம் | தமிழ் | |
| தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | | |

இவற்றுக்கு மேலதிகமாக, பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி (S).

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் கணித பாடத்துக்கு குறைந்தது திறமைச் சித்தி (C).

அல்லது

க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சையில் கணித பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெறுதல் வேண்டும்.

இவற்றுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

## (48) வடிவமைப்பு (DESIGN)

யாதேனும் மூன்று பாடங்கள்

இவற்றுக்கு மேலதிகமாக, பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி (S).
க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் கணித பாடத்துக்கு குறைந்தது திறமைச் சித்தி (C).

அல்லது

க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சையில் கணித பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி (S).

மேலும், 2017/2018 கல்வியாண்டு முதல் இந்த கற்கைநெறிக்கு தகைமை பெறும் பொருட்டு விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியையும் (S) கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியையும் (C) பெறுதல் வேண்டும்.

இவற்றுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

**(49) நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்**
**(FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு குறைந்தது திறமைச் சித்தி (C) பெறுதல் வேண்டும்.

இவற்றுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

**(50) சட்டம் (LAW)**

(i) பின்வரும் பாடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட் மூன்று பாடங்கள்.

| | |
|---|---|
| புவியியல் | அரசியல் விஞ்ஞானம் |
| விவசாய விஞ்ஞானம் | வணிகப் புள்ளிவிபரவியல் |
| உயிரியல் | உயர் கணிதம் |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | வரலாறு |
| வணிகக் கல்வி | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| இரசாயனவியல் | பொருளியல் |
| கணிதம் அல்லது இணைந்த கணிதம் | கணக்கீடு |
| பௌதிகவியல் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |

அல்லது

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒன்று அல்லது இரண்டுடன் பின்வரும் பாடங்களில் எஞ்சிய பாடம் அல்லது பாடங்கள்.

| | |
|---|---|
| பௌத்த சமயம் அல்லது பௌத்த நாகரீகம் | ஆங்கிலம் |
| இந்து சமயம் அல்லது இந்து நாகரீம் | பிரெஞ்சு |
| கிறிஸ்தவ சமயம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம் | சிங்களம் |
| இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம் | ஜேர்மன் |
| ஜப்பான் | தமிழ் |
| சீனம் | அரபு |
| பாளி | |
| கிரேக்க மற்றும் உரோம நாகரீகம் | |

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு குறைந்தது திறமைச் சித்தி (C).

அல்லது

க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி (S).

**(51) வசதிகள் முகாமைத்துவம் (FACILITIES MANAGEMENT)**

இணைந்த கணிதம் அல்லது கணக்கீட்டுப் பாடத்துடன் பின்வரும் பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்கள்

வணிகப் புள்ளிவிபரவியல்
வணிகக் கல்வி
இரசாயனவியல்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
பௌதிகவியல்
உயர் கணிதம்
பொருளியல்

இவற்றுக்கு மேலதிகமாக க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தியும் (C) விஞ்ஞான பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தியும் (S) பெறுதல் வேண்டும்.

**(52) கணக்கிடலும் முகாமைத்துவமும் (COMPUTATION & MANAGEMENT)**

பொருளியல் அல்லது இணைந்த கணிதம் உள்ளிட்ட ஏதாவது மூன்று பாடங்கள்

இவற்றுக்கு மேலதிகமாக, க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் கணித பாடத்துக்கு குறைந்தது திறமைச் சித்தி (C) பெறுதல் வேண்டும்.

**(53) முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (தென் கிழக்குப் பல்கலைக்கழகம்)**
**MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SOUTH EASTERN UNIVERSITY)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

**(54) விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (SCIENCE & TECHNOLOGY)**

உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதிக விஞ்ஞான பாடநெறிகளுக்குத் தேவையான தகைமைகள் ஏற்புடையதாகும். (இலக்கம் 18 மற்றும் 34ஐப் பார்க்கவும்)

**(55) கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (COMPUTER SCIENCE & TECHNOLOGY)**

இந்தப் பாடநெறிக்கும் உயிரியல், பௌதிக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) பாடநெறிகளுக்குத் தேவையான மூன்று பாடங்கள் (இலக்கம் 18, 34 மற்றும் 37ஐப் பார்க்கவும்)

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(56) தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் (ENTREPRENEURSHIP & MANAGEMENT)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(57) விலங்கு விஞ்ஞானம் (ANIMAL SCIENCE)**

உயிரியல் விஞ்ஞானம் பாடநெறிக்கான தகைமைகள் ஏற்புடையதாகும். (இலக்கம் 18ஐப் பார்க்கவும்)

**(58) ஏற்றுமதி விவசாயம் (EXPORT AGRICULTURE)**

உயிரியல் விஞ்ஞானம் பாடநெறிக்கான தகைமைகள் ஏற்புடையதாகும். (இலக்கம் 18ஐப் பார்க்கவும்)

**(59) தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்**
**(TEA TECHNOLOGY & VALUE ADDITION)**

பின்வரும் பாடச் சேர்மானங்களில் ஒரு பாடச்சேர்மானம்

(i) உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம்
(ii) இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

**(60) கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்**
**(INDUSTRIAL INFORMATION TECHNOLOGY)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(61) கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்**
**(MINERAL RESOURCES & TECHNOLOGY)**

பின்வரும் பாடச்சேர்மானங்களில் ஒன்று

(i) உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல்
(ii) இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

**(62) நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம்**
**(AQUATIC RESOURCES TECHNOLOGY)**

உயிரியல் விஞ்ஞானப் பாடநெறிக்கான பாடச்சேர்மானங்கள் ஏற்புடையதாகும். (இலக்கம் 18ஐப் பார்க்கவும்)

**(63) பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்**
**(PALM & LATEX TECHNOLOGY & VALUE ADDITION)**

பின்வரும் ஒரு பாடச்சேர்மானத்திலிருந்து மூன்று பாடங்கள்

(i) உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம்
(ii) இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்

**(64) விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்**
**(HOSPITALITY TOURISUM & EVENTS MANAGEMENT)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(65) உடற் கல்வி (PHYSICAL EDUCATION)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(66) விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (SPORTS SCIENCE & MANAGEMENT)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(67) பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் (SPEECH & HEARING THERAPHY)**

உயிரியல்விஞ்ஞானம் அல்லது பௌதிகவிஞ்ஞானம் அல்லது கலைப் பாடத்துறையின் கீழான ஏதேனும் மூன்று பாடங்கள்

**(68) விவசாய வள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும் (AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY)**

விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் பாடநெறிக்கான பாடச் சேர்மானம் (இலக்கம் 13ஐப் பார்க்கவும்)

**(69) விவசாய வியாபார முகாமைத்துவம் (AGRI BUSINESS MANAGEMENT)**

உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆகியவற்றுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

பௌதிகவியல் விவசாய விஞ்ஞானம்

உணவுத் தொழில்நுட்பவியல் அல்லது உயிர்வளத் தொழில்நுட்பவியல் அல்லது விவ்சாயத் தொழில்நுட்பவியல்

**(70) பசுமைத் தொழில்நுட்பம் (GREEN TECHNOLOGY)**

உயிரியல், மற்றும் இரசாயனவியல் ஆகியவற்றுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

பௌதிகவியல் விவசாய விஞ்ஞானம்
உணவுத் தொழில்நுட்பவியல் அல்லது உயிர்வளத் தொழில்நுட்பவியல் அல்லது விவசாயத் தொழில்நுட்பவியல்

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்துக்கு குறைந்தது திறமைச் சித்தி (C) பெறுதல் வேண்டும்.

## (71) நிலத்தோற்றக் கட்டடக்கலை (LANDSCAPE ARCHITECTURE)

(i) பின்வரும் பாடங்களில் குறைந்தது ஒரு பாடம்

| | | |
|---|---|---|
| சித்திரம் | புவியியல் | உயிரியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | விவசாய விஞ்ஞானம் | |

(ii) பின்வரும் பாடங்களில் மேலும் ஒன்று அல்லது இரண்டு பாடங்கள்

| | |
|---|---|
| கணக்கீடு | ஹிந்தி |
| அரபு | பௌத்த நாகரீகம் |
| வரலாறு | ஆங்கிலம் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | மனைப் பொருளியல் |
| ஜப்பான் | இஸ்லாமிய நாகரீகம் |
| பொருளியல் | சீனம் |
| கிரேக்க மற்றும் உரோம நாகரீகம் | |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | |
| பாளி | அரசியல் விஞ்ஞானம் |
| கணிதம் | பிரெஞ்சு |
| இந்து நாகரீகம் | சமஸ்கிருதம் |
| தமிழ் | சிங்களம் |
| கிறிஸ்தவ நாகரீகம் | ஜேர்மன் |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | வணிகக் கல்வி |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | |

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி (S).

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் கணித பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தி (C) ஐ அல்லது க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சையில் கணித பாடத்துக்கு குறைந்தது சாதாரண சித்தி(S).

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

## (72) தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (INFORMATION TECHNOLOGY & MANAGEMENT)

பின்வரும் பாடங்களில் குறைந்தது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) ஏதேனும் மூன்று பாடங்கள்

| | |
|---|---|
| உயர் கணிதம் | வணிகப் புள்ளிவிபரவியல் |
| இணைந்த கணிதம் | பொருளியல் |
| புவியியல் | பௌதிகவியல் |
| கணிதம் | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| கணக்கீடு | |

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தி (C).

## (73) சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் (TOURISM & HOSPITALITY MANAGEMENT)

பின்வரும் பாடச்சேர்மானத்திலிருந்து ஒரு பாடச்சேர்மானம்

(i) வணிகவியல், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட மூன்று பாடங்கள்

(ii) பின்வரும் பாடங்களிலிருந்து குறைந்தது ஒரு பாடம்

பொருளியல், புவியியல், வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் கலைப் பாடத்துறையின் கீழ் ஏனைய இரண்டு பாடங்கள்

## (74) தகவல் முறைமைகள் (INFORMATION SYSTEMS)

பின்வரும் பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தி (C) சகிதம் ஏதேனும் மூன்று பாடங்கள்

உயர் கணிதம்
கணிதம் அல்லது இணைந்த கணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்
கணக்கீடு
வியாபாரப் புள்ளிவிபரவியல்
பொருளியல்
வணிகக் கல்வி
உயிரியல்
அரசியல் விஞ்ஞானம்
அளவையியலும் விஞ்ஞான முறையும்
புவியியல்
குடிசார் தொழில்நுட்பவியல்
பொறிமுறைத் தொழில்நுட்பவியல்
மின், இலத்திரனியல் மற்றும் தகவல்தொழில்நுட்பவியல்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தி (C) பெறுதல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

## (75) மென்பொருள் பொறியியல் (SOFTWARE ENGINEERING)

இணைந்த கணிதம், பௌதிகவியல் ஆகிய பாடங்களுடன் பின்வரும் பாடங்களில் ஒன்று

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

## (76) மொழிபெயர்ப்புக் கற்கைகள் (TRANSLATION STUDIES)

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(77) திரைப்படம், தொலைக்காட்சி கற்கைகள்**
**(CINEMA & TELEVISION STUDIES)**

ஏதேனும் மூன்று பாடங்கள்

இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**(78) செயற்திட்ட முகாமைத்துவம் (PROJECT MANAGEMENT)**
ஏதேனும் மூன்று பாடங்கள்

**(79) பொறியியல் தொழில்நுட்பம் (ENGINEERING TECHNOLOGY)**

பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

| | |
|---|---|
| பொருளியல் | புவியியல் |
| மனைப் பொருளியல் | ஆங்கிலம் |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| சித்திரம் | வணிகக் கல்வி |
| விவசாய விஞ்ஞானம் | கணக்கீடு |
| கணிதம் | |

**(80) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (BIOSYSTEMS TECHNOLOGY)**
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகியவற்றுடன் பின்வரும் பாடங்களில் ஒரு பாடம்

| | |
|---|---|
| பொருளியல் | புவியியல் |
| மனைப் பொருளியல் | ஆங்கிலம் |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| சித்திரம் | வணிகக் கல்வி |
| விவசாய விஞ்ஞானம் | கணக்கீடு |
| கணிதம் | |

**(81) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
**(INFORMATION COMMUNICATION TECHNOLOGY)**

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்துடன் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் பொறியியற் தொழில்நுட்பவியல் அல்லது உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்கள்

**(82) ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பிப்பதற்கான கற்கைப் பாடநெறி**
**(TEACHING ENGLISH AS A SECOND LANGUAGE) (TESL)**

ஆங்கிலப் பாடம் உள்ளிட்ட வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள்

**(83) உணவு வணிக முகாமைத்துவம் (FOOD BUSINESS MANAGEMENT)**

பின்வரும் பாடங்களில் மூன்று பாடங்கள்

| | |
|---|---|
| இரசாயனவியல் | உயிரியல் |
| பௌதிகவியல் | இணைந்த கணிதம் |
| விவசாய விஞ்ஞானம் | வணிகக் கல்வி |
| பொருளியல் | கணக்கீடு |

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தி (C).

**(84) கடல்சார் மற்றும் நன்னீரியல் விஞ்ஞானம்**
**(MARINE AND FRESH WATER SCIENCE)**

பின்வரும் பாடச்சேர்மானங்களிலிருந்து ஒரு பாடச்சேர்மானம்

I. இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல்
II. இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் இணைந்த கணிதம்

**(85) பௌதீக விஞ்ஞானம் - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
**(PHYSICAL SCIENCE – ICT)**

இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள்

10.0 இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், இது தொடர்பில் மாணவர்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் எனவும் எதிர்பார்க்கின்றேன். பல்கலைக்கழகப் பாடநெறிகளுக்கான பாடச்சேர்மானங்களுக்கு மேலதிகமாக பாடநெறிக்கான மொழிமூலம் மற்றும் பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்கையில் வேண்டப்படும் ஏனைய தகைமைகள் மற்றும் ஏனைய தகவல்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்படுகின்ற **“இலங்கைப் பல்கலைக்கழக இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்கான அனுமதி”** எனும் கையேட்டினைப் பயன்படுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் பிரேரணை செய்யப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்புகளின் பிரகாரம் இந்தச் சுற்றறிக்கையின் பிரிவுகளும் திருத்தங்களுக்கு உட்படலாம்.

இச்சுற்றுநிருபத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

டபிள்யு.எம்.பந்துசேன
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :-

1. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
2. தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பளார் நாயகம்
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்
4. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. கல்வி அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்
8. அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 · +94112785818
info@moe.gov.lk · www.moe.gov.lk


මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/09/12/02/01

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2021.06.16

சுற்றுநிருப இலக்கம்: 11/2021

அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து வலய கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து கோட்ட பொறுப்பு பிரதி/ உதவி கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து அதிபர்கள்

**<u>க.பொ.த (உயர் தர) பாடத்துறையில் கொரிய மொழியை சேர்த்தல்</u>**

கல்வி பொது தராதர பத்திர (சாதாரண தர) பாடத்திட்டத்துக்காக 2015 ஆம் வருடத்தில் கொரிய மொழியை சேர்த்ததோடு அதனை வெளிநாட்டு மொழியாக கற்பதற்கும் வாய்ப்பை மேலும் விரிவு படுத்தவதற்காக க.பொ.த (உயர்தர) பாடத்துறையில் சேர்க்க வேண்டியது காலத்துக்கேற்ற அவசியமாக உணரப்படுகின்றது.

2.0 தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய க.பொ.த (உயர்தர) பாடத்துறையில அறிமுகம் செய்யப்பட்ட கொரிய மொழி தொடர்பாக இந்த சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் இதன் பின்னர் வலுவில் இருக்கும்.

3.0 க.பொ.த (உயர்தர) பாடத்துறைக்கு 2021 ஆண்டு தொடக்கம் கலை பாடத்துறை பிரிவில் மொழி தொகுதியில் உப பாடமாக கொரிய மொழி சேர்க்கப்படுகின்றது. அதாவது, 'க.பொ.த (உயர்தர) பாடச் சேர்க்கை மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான பாடசேர்க்கை' தொடர்பான சுற்றுநிருப இலக்கம் 2016/13 மற்றும் 2016.04.26 திகதிய கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில் 5.1.6 கலைப் பாடத்துறைக்காக பாடத்தொகுதியில் (ஏ) மொழி பாடங்களின் தொடரிலக்கம் 3யின் கீழ் உள்ளடங்கிய பாடங்களுக்கு மேலதிகமாக கொரிய மொழி பாடமும் உள்ளடக்கப்படுகின்றது.

4.0 அந்த பாடத்துக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்படுவதோடு ஆசிரிய பயிற்சியும் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

5.0 2021 கல்வி ஆண்டின் க.பொ.த. (உயர்தர) இற்காக தரம் 12 இல் அனுமதிக்கப்படும் மாணவ மாணவியருக்க 2021/2023 கல்வி வருடங்களில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் முதற் தடவையாக கொரிய மொழிக்காக தோற்ற வாய்ப்பு கிடைக்கும்.

6.0 க.பொ.த (உயர்தர) பாட சேர்க்கை மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்காக பாட சேர்க்கை தொடர்பாக கல்வி அமைச்சு 2016.04.26 திகதிய 2016/13 சுற்றுநிருபம் இனிவருங்காலத்தில் திருத்தப்பட இருக்கின்றது.

அதன் படி க.பொ.த (உயர்தர ) கொரிய மொழி பாடம் தொடர்பாக உரிய தரப்பினரை அறிவுறுத்தி மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

பேராசிரியர் கே. கபில சீ.கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்
01. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
02. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
03. அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
04. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
05. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம்
06. கல்வி வெளியீட்டு ஆணையாளர், கல்வி வெளியீட்டு திணைக்களம்